அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 20/99

எனது இல: IV/4/2-20
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு.
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-07.
1999.08.18

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

1999 மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு சேவையிலிருந்து ஒன்றில் ஓய்வு பெற்ற அல்லது இராஜினாமாச் செய்த அரசாங்க அலுவலர்களை பதவிகளில் மீள அமர்த்துதல்.

1999 மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு சேவையிலிருந்து ஒன்றில் ஓய்வு பெற்றுள்ள அல்லது இராஜினாமாச் செய்துள்ள ஓர் அலுவலர், பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தி, தன்னை சேவையில் மீள அமர்த்துமாறு கோரி, பொருத்தமான நியமன அதிகாரிக்கு 1999, டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன் ஒரு மேன்முறையீடு செய்தால், அதனைக் கருத்திற்கு எடுத்தபின், பொருத்தமான வெற்றிடம் இருக்குமிடத்து, சேவையில் மீள அமர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

(அ) அவர் தாபன விதிக் கோவையின் XXXIIஆம் அத்தியாயத்தின் 1:1ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கு அமைய அரசியல் உரிமைகளைப் பிரயோகிப்பதற்கு உரிமை அற்றவர்.

(ஆ) அவர் 1999 மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஒன்றில் ஓய்வுபெற்று அல்லது இராஜினாமாச் செய்து போட்டியிட்டு போதியளவு எண்ணிக்கையான விருப்பு வாக்குகளைப் பெறாதமை காரணமாக ஒரு மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய்யப்படத் தவறிய ஒருவர்.

(இ) அவர் தனது விரு ப இளைப்பாற்று வயதுக்கு குறைந்த ஒருவர்.

- 02 -

(05) அத்தகைய ஓர் அலுவலர் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது இராஜினாமாச் செய்த தேதி முதல் அவர் சேவைக்கு மீள அமர்த்தப் படும் தேதி வரையிலான காலப்பகுதி, தாபன விதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 17.2 ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கு அமைய, அவருக்கு உளதாகவிருக்கும் அவர் சம்பாதித்த விடுதலையிலிருந்து கழிக்கப்படல் வேண்டும். குறிப்பிட்ட காலப்பகுதிக்கும் கூடுதலான மேலதிக காலப்பகுதி சம்பளம் அற்ற விடுதலையாக கருதப்படல் வேண்டும்.

(06) சேவையில் மீள அமர்த்துதலானது ஒரு ஓய்வுபெற்ற அலுவலர் சம்பந்தமானதாக இருக்குமிடத்து, அவரால் பெறப்பட்ட ஓய்வூதியம் அல்லது ஓய்வூதியப் பணிக்கொடை ஏதாவதிருப்பின் அவற்றை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன் அவருக்கு எதிர்காலத்தில் ஓய்வூதியம் வழங்கப்படுதலை நிறுத்தும்படி பொருத்தமான அதிகாரிகளுக்கு உடனடியாக அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

(07) இச் சுற்றறிக்கையானது, 1999 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களுக்கு மட்டும் பொருந்தற்பாலதாகும்.

ஒப்பம்/ பீ.ஏ.சேனாரத்ன.
செயலாளர்.
அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு.